தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2039, பங்குனி 28

2008 ஏப்ரல் 10, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்."

குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராயினும், தனக்கு இழுக்கு வரும் என்று கருதாமல் தண்டிப்பதும் அரசின் கடமையாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

81—

கட்டடம்

***29618—திரு. ஆர்.கே. பாரதி மோகன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, மணலூர் ஊராட்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மணலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் நிதிநிலை மிகவும் மோசமான நிலையில் உள்ளதாலும், இவ்வங்கிக்குக் கடன் பெற்று புதிய கட்டடம் கட்ட போதுமான நிதி ஆதாரம் இல்லாததாலும், இவ்வங்கிக்குப் புதிய கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டடம், 1967 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கட்டடம் ஆகும். அது தற்போது இடிந்து விழும் சூழ்நிலையில் உள்ளது. அந்த வங்கியில் மணலூர், கஞ்சனூர், குமணந்துறை, திருமாந்துறை, கார்ப்பரங்குறிச்சி, சிற்றிடையாநல்லூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 1,680 அங்கத்தினர்கள் உள்ளனர். அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்தக் கட்டடத்தைக் கட்டித் தருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எனது தொகுதியைச் சேர்ந்தவர்தான். அவர் எங்கள் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்தான். என்னுடைய வீட்டுக்குப் பின்புறம் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள்தான் அது இருக்கிறது. நிச்சயமாக எனக்குத் தெரியும். அது நியாயம்தான். ஆனாலும், நிதி வசதி இல்லாத காரணத்தால்தான் செய்ய முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடுமான வரையிலே, பிற்பகுதியிலே ஏதாவது நிதி கிடைக்குமானாலும் அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சிறிதளவு கொடுப்பாரானாலும், அதைச் செய்து கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

2008 ஏப்ரல் 10]

திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். வருகின்ற நிதியாண்டிலாவது அதை அவர்கள் கட்டித் தருவார்களா என்று தங்கள்மூலம் கேட்க விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

82—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***24146—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி நகரத்தில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் வாடகைக் கட்டடத்தில் தற்போது இயங்கி வருகிறது. சீர்காழி நகரம் அல்லது நகரை ஒட்டிய மெயின் ரோட்டில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தமாக இடம் வாங்க, தனியாருக்குச் சொந்தமான இடமோ அல்லது அரசுப் புறம்போக்கு நிலமோ தேர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2008-2009 ஆம் நிதி ஆண்டில் இப்பணி நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி நகரத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனைக் கூடத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் இல்லை. அங்கே இடம் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்